03.08.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை .(ஒ.எஸ்.எண்.7 / 2020.)திரு.குருசாமி.

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் அகிலாண்டபுரம் கிராமத்தில். வழக்கு சொத்து எனக்கு எப்படிப்பாத்தியம் என்றால் எனது தாத்தா வழியாக வந்த சொத்து. தாவாச்சொத்து எனது தாத்தா பெயரிலோ எனது தகப்பனாரின் பெயரிலோ இருந்ததை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறோம். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு 2 வது தபசில் சொத்தில் நான் தான் மாட்டுத்தொழுவம் அமைத்துள்ளதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு தாக்கல் செய்யும் போது காலிமனையாக உள்ள 2 வது தபசில் சொத்தின் மதிப்பு ரூ.1,00,000/.– அல்லது ரூ.1,50,000/–இருக்குமா என்றால் இருக்கும். எந்த தேதியில் 1 ம்பிரதிவாதிக்கு 2 வது தபசில் சொத்தை பயன்படுத்தி அனுமதி கொடுத்தேதாம் என்று சொல்லவில்லை என்றால் வருடம் சொல்லியுள்ளேன் தேதி சொல்லவில்லை. எனது வீட்டின் கிழமேல்,.தென்வடல் அளவு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனது வீட்டின் அளவு கிழமேல் 31 அடி தென்வடல் 25 அடி ஆகும். என்னுடைய பிராதில் எனது வீட்டின் கதவு எண்.3/29 அதற்கு பழைய கதவு எண்.97 டி என்றுகாட்டியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.,3 தீர்வை ரசீது நான் சொல்லும் வீட்டிற்குரியது என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு பரம்பரையாக பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். 2 ம்வாதி எனது மனைவி ஜெயலட்சுமிக்கும் தபசில் சொத்தில் உரிமையுள்ளது என்பதால்

இந்தவழக்கை இருவரும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம்., முதல் விசாரணையில் எனது மனைவிக்கும் தபசில் சொத்து பாத்தியம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு2 வது தபசில் சொத்தில் 1ம்பிரதிவாதி கடந்த 40 வருடங்களாக அனுபவித்து வருகிறார் என்றால் அது பொய். 2 வது தபசில் சொத்தில் உள்ள தொழு எனது பெயருக்கோ கதவு எண்ணோ ரசீதோ ஏற்படவில்லை என்றால் இல்லை. எனது மமைனவி பெயரில் உள்ளது. எனது மனைவி பெயரில் உள்ளதை காட்டக்கூடிய எந்தவித ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் காட்டப்பட்டுள்ள 2 வது தபசில் சொத்திற்கும் எனக்கம் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான்சொல்லுவது போல் 2 வது தபசில் 1 வது தபசில் சொத்தில் ஒரு பகுதியும் கிடையாது என்றால் சரியல்ல.2 வது தபசில் சொத்தும்,அதோடு சேர்ந்த வேறு சொத்தும 3 ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதில் பிரதிவாதிகள் வகையறார்க்கள் 40 வருடங்கள் தொழுவம் அமைத்து பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் பொய். நான்கோரியுள்ள பரிகாரத்திற்கு நீதிமைன்ற கட்டணமும் தவறானது என்றால் சரியல்ல. 2 வது தபசில் சொத்தினை பொறுத்து சுவாதீனப்பரிகாரம் கோராமல் செயல்உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி நிலை நிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
03.08.2024.